விவேகானந்த விழாக்களையும் கொண்டாடி வருகிறார். தான் பிறந்த ஊரான சிவபூமியில் இளமையில் கல்வி கற்கும் காலத்திலேயே கிராம முன்னேற் சங்கச் செயலாளராகவும் ஸ்ரீ பாசுபதேஸ்வரர் ஆலயத்தின் செயலாளராகவும் செயற்பட்டு ஆலயத்தை புனரமைத்ததோடு பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்டார். இவருக்கு கடவுளின் ஆசீர்வாதமும் உயிர்துடிப்புள்ள சேவையின் விளைவுமே கலங்கரை விளக்கமாகத் திகழும் சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையமும் அதன் பணிகளும், அபிவிருத்தி அடைய வழிசமைத்ததென்றால் மிகையில்லை.

1972 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22ம் திகதி அடக்கமே உருவான புண்ணியவதி அக்கரைப்பற்றைச் சேர்ந்த நாகமணி கமலேஸ்வரி அவர்களை விரும்பித் திருமணம் புரிந்த இவர் அன்று தொடக்கம் பொது வாழ்வுப் பணியில் தம் மனைவியையும் ஈர்த்துக் கொண்டார்.

அன்றிலிருந்து இன்று வரை இலைமறை காயாக இவர் மனைவியே இவரின் ஒவ்வொரு பணிக்கும் உந்து சக்தியாக திகழ்ந்திருக்கிறார் என்பதை உணர முடிகின்றது. காரணம் 24 மணித்தியால ஓய்வு அற்ற சேவையினை இவர் தொடர அவரது விட்டுக் கொடுப்பு மட்டுமல்ல சொத்திழப்புக்களுக்கும் சோர்வுகளுக்கும் மன உழச்சல்களுக்கும் அவர் ஒத்தடமாக ஓர் தியாக வேள்வியாகச் செயற்பட்டிருக்கா விட்டால் ஒப்புயர்வற்றுத் திகழ்வதும் அக்கரைப்பற்று தமிழ் மண்ணின் பெருமையை உலகமெல்லாம் பறை சாற்றிக் கொண்டிருப்பதுமான இக்கலங்கரை விளக்கமாகத் திகழும் இந்து சமய விருட்சமான இச் சேவாச்சிரமத்தை நாம் கண்டிருக்கவே முடியாது.

ஆச்சிரம பணியோடு மட்டும் ஐயா நின்று விடவில்லை. இந்து இளைஞர் மன்றத்தின் ஊடாகவும் பல்வேறு பணிகளை ஆற்றியிருக்கிறார். அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் 25 வருடங்களுக்கு மேலாக புனர் நிர்மானம் தடைப்பட்டிருந்ததை கவலையோடு நோக்கி 1976ல் புனர்நிர்மான சபையில் இணைந்து கட்டி முடித்தோடு கும்பாபிஷேகமும் கண்டு சில காலம் தர்ம கர்த்தாவாக செயற்பட்டார். 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட காட்டு மிராண்டித் தனமான இனக் கலவரத்தின் போது முண்டங்கள் நூற்றுக் கணக்கில் கடலில் மிதந்து கொண்டிருந்த வேளையில் இலங்கை இராணுவத்தினரை ஊர் பெரியார்களோடு சேர்ந்து தைரியமாக அக்கரைப்பற்று முகாமில் சந்தித்துப்பேசி பிரஜைகள் குழு அமைத்து அப்பாவிகள் கைதாவதைத் தடுத்து நிறுத்தியதோடு, தமிழ் முஸ்லீம்களிடையே நல்லிணக்கம் ஏற்படவும் வழிசமைத்தார். அச்சமயத்திலேயே

அநாதைகள் தப்பிக்கொள்வதற்காக விபுலாநந்த அனாத "லமானிவாச" என்ற பெயரில் இவ் ஆச்சிரமத்தையும் ஆரம்பித்தார். அத்தோடு பாலர் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த இவர் விபுலாநந்த பாலர் பாடசாலையையும் ஆரம்பித்து 25வருடங்களாக இயக்கி வருகின்றார். இதில் பராமரிக்கப்பட்ட பல நூற்றுக் கணக்கான மாணவர்களும் தற்போது இவ்வூரை அலங்கரிக்கும் சிறந்த விருட்ஷங்களாக திகழ்கின்றார்கள் என்பது வெள்ளிடை மலை. இரண்டிற்கும் மேற்பட்ட உறவுகளை இழந்தவர்களுக்கு மன்றத்தினால் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன. இடித்தளிக்கப்பட்ட அம்பாறை மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தை இந்து இளைஞர் மன்றத்தின் ஊடாக சீர்செய்து ஓர் சபையையும் அமைத்து கும்பாபிஷேகமும் கண்டு தழிழர்களும் சிங்களவர்களும் ஒன்று சேர்ந்து வணங்கி சமத்துவமாகப் பேசி வாழ வழிசமைத்தார்.

கல்லோயா வலது கரை பனங்காட்டு வாய்க்காலின் ஊடாக தமிழர்கள் முழுமையாக பாசனம் பெறும் வகையில் இராணுவத்தினரோடு பேசி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு பல ஆயிரம் ஏக்கர்களுக்கு பாசனம் பெற்றுக் கொடுத்தார். இந்து சமய எழுச்சி விழாக்கள் அனேகமானவற்றை அன்று தொடக்கம் இன்று வரை முன்நின்று செயற்படுத்தி வருகிறார். பல்வேறுபட்ட சபைகளில் காத்திரமான யோசனைகளை வழங்கி மகாசக்தி அம்பாரை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் போன்றவற்றை உருவாகுவதற்கு வழிசமைத்ததோடு பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மக்களைச் சேர அன்று தொடக்கம் இன்றுவரை பாடுபட்டுக் கொண்டே இருக்கிறார்.

இதேபோல் வடக்கு கிழக்கில் முதல் முதலாக 1994,1995 காலப்பகுதியில் அதாவது விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் நிழலாக இருந்த தருணத்தில் தமிழர்கள் பொலிஸாரை நெருங்க முடியாது நீதி கிடைக்காது தவித்த வேளையில் மத்தியஸ்த சபையினை துணிகரமாக நிறுவி தவிசாளராக இருந்து செயற்பட்டார். இதனால் ஏராளமான சமூகப் பிணக்குகள் தீர்க்கப்பட்டதோடு மக்கள் நிம்மதியாக வாழவும் வழியேற்பட்டது. சுனாமி ஏற்பட்ட போதும், அடிக்கடி வெள்ளங்கள் புயல்கள் வந்த போதும் மனிதாபிமான நிவாரணப் பணிகள் பலவற்றை செய்யவும் ஐயா தவறியதில்லை.

இப்படிப்பட்ட தூய தொண்டு நெறியாக போற்றப்படுகின்ற சமூக நலப்பணிகள் உடல்நலப்பணிகள் மனப்பண்பாட்டுப் பணிகள் துயர் துடைப்புப்

பணிகள் அனைத்தையும் வாயளவில் அல்லாமல் செயல்முறையில் காட்டிய இவரை ஊர்மக்கள் மட்டுமல்ல தேசமும் சர்வதேசமும் அறியவும் ஆதரிக்கவும் வாழ்த்தவும் தவறியதில்லை. அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச கலாசார பேரவையினாலும் அக்கரைப்பற்று இந்து மாமன்றத்தினாலும் இந்து கலாசார திணைக்களத்தினாலும், சர்வதேச இந்து மத குரு பீடத்தினாலும் உலக சைவப் பேரவையினாலும், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மாவின் தெள்ளிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தினாலும் விருதுகள் பட்டங்கள் பல பெற்ற போதிலும் இறைபணிச் செம்மல் எனும் ஒரே கௌரவத்தோடு நிறைவாக சேவையாற்றி வருகிறார். கங்கைபோல் வளம் சேர்ந்த இவரைக் கௌரவிப்பதில் எமது நிலையம் மட்டுமல்ல எமது மக்களும் பெருமைகொள்கின்றனர்.

திரு. பெருமாள்பிள்ளை சுந்தரமூர்த்தி
ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்
பிராந்திய அபிவிருத்தி வங்கி முகாமையாளர்
கோளாவில் - 02
அக்கரைப்பற்று.

வேகமாகச் செயல்படுவதை விட, விவேகமாக செயல்படுவதே சிறந்தது
- **புரூஸ்**

பிறருக்கு நன்மைசெய்பவன் தனக்கும் நன்மை தேடிக் கொள்கின்றான்
- **ஸெனகா**

மனிதன் பயனின்றி அழியவேகூடாது இது உன் மனதில் இருக்கட்டும்
- **கார்ஸ் மார்க்ஸ்**

உழைப்பு வறுமையை மட்டுமல்ல தீமையையும் விரட்டி விடும்
- **வால்டேர்**

மன ஆரோக்கியத்திற்கு சிறந்த மருந்து, மௌனத்தைத்தவிர வேறொன்றும் இல்லை
- **க்யோதே**

## சமூக ஜோதி என்னும் பட்டத்திற்குரியவர் திருவாளர். வே. சந்திரசேகரம் JP அவர்கள்



"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

நாம் எந்த துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்க வேண்டும் என்ற திருவள்ளுவரின் திருமொழிக்கேற்ப வேலுப்பிள்ளை எனும் ஆன்மீகவாதிக்கும் செல்லம்மா என்பவருக்கும் திருமகனாக 1940.12.03ஆம் திகதி பிறந்தவரே சந்திரசேகரம் ஐயா ஆவார். இவரை எல்லோரும் ஐயா என்றே மரியாதையின் நிமிர்த்தம் அழைப்பார்கள். இவர் ஆரம்பக் கல்வியை ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாலயத்தில் கற்றார். ஒரு மனிதன் எவ்வாறு இவ்வுலகில் வாழ வேண்டும் என்ற இலக்கணத்தில் சிறிதும் பிசகாது வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கும் ஓர் உத்தமர்.

இவர் ஓர் ஆசானாக, அதிபராக இருந்து கல்விக்கு அளப்பரிய சேவைகளை திறம்பட செய்து இப்போது அரச இயந்திரத்தில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். மனிதருள் பலர் அரச கடமைகளில் இருந்து ஓய்வு பெற்ற பின் உடலாலும், உளத்தாலும் சோர்ந்து உழன்று கொண்டிருக்கும் இவ்வேளைகளில் இவர் ஓர் இளைஞனைப் போல் இந்துமாமன்றத்தின் தலைவராக 2002 தொடக்கம் இன்றுவரை இந்து மக்களின் ஆத்மீக எழுச்சிக்கும், சமூக சேவைக்கும் தன்னை அர்ப்பணித்ததுடன் இந்து இளைஞர் மன்றத்தின் உபதலைவராகவும் இருந்தார். விவசாய விதை நெல் சங்கம், சிறுவர் பாதுகாப்பு குழு உறுப்பினராகவும், பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் இயக்குனராகவும், ஆலையடிவேம்பு மத்தியஸ்த சபை தவிசாளார், உறுப்பினர் எனவும் தன்னாலான பல துறைகளிலும் "மக்கள் சேவையே மகேசன் சேவை" எனக் கொண்டு எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் மகான் ஆவார்.

விபுலாநந்தா சிறுவர் இல்லத்தின் அபிவிருத்தியில் ஐயாவின் பங்களிப்பு அபரிவிதமானது. ஓர் கட்டடத்திற்கு எவ்வாறு தூண்கள் அவசியமோ அதே போன்றுதான் விபுலாநந்தா சிறுவர் இல்லத்திற்கும் அவரது சேவையும் அளப்பரியது. 1987ல் இந்து இளைஞர் மன்றம் அக்கரைப்பற்றில் உதயமானது. இதன் தலைவராக இறைபணிச் செம்மல் திரு. கயிலாயப்பிள்ளை ஐயா இருக்க, உபதலைவராக அன்றில் இருந்து இன்றுவரை சந்திரசேகரம் ஐயா சேவைசெய்து கொண்டு

இருக்கின்றார். அது மட்டுமன்றி விபுலானந்தா இல்லத்தின் இயக்குனராகவும் இருந்து தனது மகத்தான சேவைகளை செய்து வருகின்றார்.

''ஆலையடிவேம்பு மத்தியஸ்த சபையின் 2007-2014க்கு இடைப்பட்ட காலப்பகுதி ஓர் பொற்காலம்'' என எல்லோராலும் கூறப்பட்டு பாராட்டப்படுவதற்கு ஐயாவின் ''மத்தியஸ்த சபை தவிசாளர்'' எனும் தலைமத்துவம் காரணம் என்றால் இதை யாராலும் மறுக்கவோ, மறுதலிக்கவோ முடியாது. 2010 ஆண்டு ''மத்தியஸ்த சபை தினம்'' ஆலையடிவேம்பு மத்தியஸ்த சபையினால் கொண்டாடப்பட்டது. இக் காலப்பகுதியில் ஆசிய பவுண்டேசன் உதவியுடன் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவினால் இலங்கையில் உள்ள மத்தியஸ்த சபைகள் பரீட்சிக்கப்பட்டன. இதில் ஆலையடிவேம்பு மத்தியஸ்த சபை சிறந்த மத்தியஸ்த சபை எனும் பெயர் பெறக் காரண கர்த்தாவாக இருந்ததார். இதனால் இவர் சேவையை மத்தியஸ்த சபை ஆணைக்குழு பாராட்டி இவருக்கு ''அகில இலங்கை சமாதான நீதவான்'' என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்தது. இவர் பக்குவத்திலும் முதிர்ச்சியிலும் மூத்தோராக இருந்தாலும் மற்றோருக்கு மதிப்பளிப்பதில் இவருக்கு நிகர் இவர்தான்.

இவரின் ஆத்மீக தொண்டையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. சங்கமன்கண்டி காட்டுப்பிள்ளையார் கோவில் அபிவிருத்தியில் ஓர் செயலாளராகவும் தொண்டனாகவும் இருந்து தமது சேவைகளை வழங்கி வருகின்றார். இவரின் தந்தை வேலுப்பிள்ளை சங்கமன்கண்டி பிள்ளையார் ஆலயத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டவர். ''தந்தை எவ்வழியோ தனயனும் அவ்வழியே'' என்னும் இலக்கணத்திற்கு ஏற்ப ஐயா அங்கு சேவை செய்து வருகின்றார்.

இவரின் இத்தன்மையை கொண்ட சேவை நற்பண்புகளுக்கு இறைவன் கொடுத்த வரம் தான் ஐயாவின் குணம் அறிந்து நடக்கும் அவரின் பத்தினி செல்வநேசம் அம்மையாரும், அவர்களுக்கு கிடைத்த குழந்தைகளும் என்றால் அது மிகையாகாது. அன்னாரின் சேவையைப் பாராட்டி ''சமூகஜோதி'' எனும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிப்பதில் இல்லம் பெருமையடைகின்றது.

நன்றி

**சாமஸ்ரீ தேசமாணி**
**ஸ்ரீ.மணிவண்ணன் (அகில இலங்கை சமாதான நீதவான்)**
**அதிபர்**
**அளிக்கம்பை அ.த.க பாடசாலை**
**அக்கரைப்பற்று.**

**கட்டடக்கலை வித்தகர் வீரக்குட்டி அவர்களின்**
**ஒப்பற்ற சீடர் திருவாளர். R. நடராஜா**



ஒரு மனிதரைப்பற்றி நினைக்கும் பொழுது அவருடைய தோற்றமும் அவர்பற்றிய எண்ணங்களும் பரிமானங்களும் எம் மனக்கண் முன்னே வந்து நின்றுவிடும் அவற்றுள் சில மன மகிழ்வைத் தரும். வேறு சில வெறுப்பைத் தரும். திருவாளர் புரவலர் R.நடராஜா அவர்கள் இதில் முதல் வகுப்பைச் சேர்ந்தவர் அவர். ஆற்றிய பணிகள் சமுதாயத்தில் நல்ல திருப்பங்களைத் தோற்றுவித்ததனால் பலருடைய இதயங்களில் ஓர் நிரந்தர இருப்பிடமாக திகழ்கின்றார். இல்லற வாழ்க்கையிலும் சமூக வாழ்விலும் அவரது தகுதிக்கும் இயல்புக்கும் ஏற்ப நிறைவான சேவையினை வழங்கி வருகின்கிறார்.

1945.08.10ம் தினம் அக்கரைப்பற்று மண்ணில் அவதரித்த இவர் விவேகமும், தீவிர உழைப்பும், விடாமுயற்சியும், மன உறுதியும் கொண்டு வாழ்வில் வாழ்வாங்கு வாழ்ந்து சமூக சேவையிலும் தன்னை அர்ப்பணித்து வருகிறார். அக்கரைப்பற்று இராமகிருஸ்ண மிஷன் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் தந்தையின் தொழில் ரீதியாக பொத்துவிலுக்கு குடும்பத்தோடு சென்ற காரணத்தால் பொத்துவில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்.

தந்தையாரான நாராயணாயர் இராமநாயர், தாயான இளையதம்பி வள்ளியம்மை ஆகியோரின் நல்ல வழிகாட்டல்கள் இவரை ஒரு பண்பாளனாக்கி சமுதாயத்திற்கு சுடர் ஒளி பரப்ப விட்டிருக்கின்றது என்றால் மிகையில்லை. மீண்டும் தொழில் ரீதியாக அக்கரைப்பற்றிற்கு தந்தையோடு வந்த இவர் கல்வியைத் தொடர நாட்டமில்லாமல் தந்தை வழிகாட்டலில் புகழ் பெற்ற கட்டடக்கலை விற்பன்னரான வீரக்குட்டி அவர்களின் ஒப்பற்ற சீடராக தொழில்புரியத் தொடங்கினார். அவரின் இதயங் கனிந்த ஆசியும் அன்பும் இன்றுவரை தன்னை வழிநடத்துவதாக அடிக்கடி கூறுவார். தனது தொழில் ரீதியாக தொழிலதிபர் வரை உயர்ந்துள்ள இவர் பல நூற்றுக்கணக்கான கட்டிடத் தொழிலாளர்களை உருவாக்கி அவர்களின் மகோன்னத வாழ்விற்கு வழிசமைத்துள்ளார்.

ஓர் ஆலயத் தலைவராக, கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராக அக்கரைப்பற்று சிறுவர் இல்லத்தின் பராமரிப்புத் தந்தையாக, ஆலையடிவேம்பு இந்து மாமன்ற உறுப்பினராக, அகில இலங்கை இந்து மாமன்ற உறுப்பினராக, அம்பாரை மாணிக்கப்பிள்ளையார் ஆலய நிர்வாக சபை உறுப்பினராக, சங்கமன் கண்டி பெருந் தெருக்கள் முருகன் கோயில் நிர்வாக சபை உறுப்பினராக அக்கரைப்பற்று லைன்ஸ் கழக உறுப்பினராகவும் செயற்பட்ட இவர் அக்கரைப்பற்று மக்கள் மனதில் நிலைத்திருக்கத் தக்கதாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலையை ஆலையடிவேம்பு இந்து மாமன்றத்திலும், சுவாமி விபுலானந்தர் திருவுருவச் சிலையை அக்கரைப்பற்று சுவாமி விபுலாநந்தர் இல்லத்திலும் நிறுவி மக்கள் மனதில் ஆன்மீக உணர்வு மலரவும் எதிர்கால சந்ததியினர் இந்து விழுமியங்களை புரிந்து வாழவும் வழிசமைத்துள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக 1994ம் ஆண்டு முதல் 1999ம் ஆண்டு வரையிலான துயரம் மிகுந்த காலத்தில் ஆலையடிவேம்பு பிரதேசசபை தவிசாளராக தெரிவாகி மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார். பொது ஸ்தாபனங்கள் முதல் வீடுகள் வரை வீதிகள் முதல் வாய்க்கால்கள் வரை இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. அகில இலங்கை சமாதான நீதவானான இவர் 25 வருடங்களாக இவ் இல்லத்தோடு பின்னிப்பிணைந்து இன்பத்திலும் துன்பத்திலும் ஒட்டி உறவாடி உயர்த்தி விட்டமைக்காக இவ்விழாவில் இவரை “கட்டடக்கலை வித்தகர்” எனப் பாராட்டி கௌரவிப்பதில் எமது இல்லம் பெருமைகொள்கிறது.

**திரு. த. கயிலாயபிள்ளை** JP
**இறைபணிச் செம்மல்**
**தலைவர், இந்து இளைஞர் மன்றம்,**
**சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம், அக்கரைப்பற்று.**





சிறந்த பணி தொடரட்டும்
ஏழை என்பது இல்லாதொழியட்டும்.
எமது மண்ணுக்கும் முத்தான சேவையாற்றும் இந்து இளைஞர் மன்றத்தினருக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## ‘செயற்பாட்டு வீரனாகத்’ திகழ்ந்த சிறிதரனின் சமூகப் பணி.



ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது அவனிடம் ஏதாவது ஒரு நல்ல சிறப்பியல்பு காணப்படும். அவனது கல்வி அறிவைப் பொறுத்தும் சந்தர்ப்பங்களையும் பொறுத்தும் இச் சிறப்பு கவர்ச்சியுடையதாக மக்கள் மனதில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்துவதாக பரிமானம் பெறுகிறது. தெல்லிப்பழை குரும்ப சிட்டியைச் சேர்ந்த பரமானந்தம் இளையதம்பி என்பவருக்கும் தம்பிராசா தங்கரெத்தினம் என்பவருக்கும் இளையதம்பி சிறிதரன் 1953.01.14ம் திகதி மகனாகப் பிறந்தார்.

சுறுசுறுப்பாக செயற்படுவதே இவரிடம் காணப்படும் ஒரு பெரிய சிறப்பாகும். எடுத்த கருமத்தை முடிக்கும் வரை ஓயாது செயற்படுவார். பொதுச் சேவையில் மிகுந்த அக்கறையுள்ளவர். இருந்தாலும் சமூகம் இவரைப் பயன்படுத்தியது குறைவாகும். புரிந்துகொள்ளாமையும் ஒரு காரணமாக இருக்கலாம். எந்தவிதமான உதவியும் இன்றி தனிமனிதனாக உழைத்து தனது இல்லறத்தை நல்லறமாக செயற்படுத்தி வருகிறார். உழைக்கும் உழைப்பில் ஒரு பகுதியை சமூக தேவைகளுக்காக செலவு செய்பவர்.

எத்தனையோ வாய்ப்பேச்சு வீரர்களைவிட இவர் பகிரங்கம் இல்லாத, வெளிக்காட்டிக்கொள்ளாத சுறுசுறுப்பு மிக்க சேவையாளர் எனக் கூறலாம். எமது இல்ல ஆரம்ப காலத்தில் தன்னை அறிமுகம் செய்து என்னால் இயன்ற பங்களிப்பை இந் நிறுவனத்திற்கு வழங்க முடியுமா? எனக் கேட்டு உள் நுழைந்த இவர் எந்த வேலையானாலும் மனக்கசப்பின்றி ஏற்று இதய சுத்தியோடு செய்து முடிப்பார். இவரது வேகச் செயற்பாட்டிற்காக, உழைப்புக்காக ஊரில் எத்தனையோ பெரிய மனிதர்கள் இருந்த போதிலும் எமது இல்லத்தின் கைவிஷேடத்திற்காக பல வருடங்களாக நான் அழைத்து வருகிறேன். காரணம் நானும் இவரைப் போல தூங்காமல் செயற்பட வேண்டும் என்ற உயரிய எண்ணமே. தூக்க முடியாத சுமையானாலும், தூர இடம் சென்று சில வேலைகளை முடிப்பதனாலும் இவர் துணையை நாம் நாடத் தவறுவதில்லை.

இல்லக் குழந்தைகளுக்கு வருடந் தோறும் தவறாது உணவளிக்கும் இவர் தான் தொழில் புரிந்த தொலைத் தொடர்பு நிலையத்திலும் பல அன்பர்களோடு கதைத்து உணவளிப்பதற்கும், உதவிகள் புரிவதற்கும் கைகோர்த்து நின்ற காலங்கள் என்றும் நினைவில் நிறுத்திப் பேசத்தக்கவையாகும்.

இத்தனைக்கும் இவர் மனைவி ரவீந்தினி அவர்களும் காரணம் என்றே கூறலாம். இன் முகத்தோடு யாவரையும் கவரத்தக்கதாக கணவனது செயற்பாட்டிற்கு அடக்கமான பேச்சின் உற்சாகத்தாலும், உறுதுணையாலும் தொலைத் தொடர்பு நிலையத்தில் சாதாரண பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமை ஏற்று தொழிநுட்ப உத்தியோகத்தர் வரை உயர்ந்து சபையின் பாராட்டையும் பெற்று ஓய்வு பெற்றார்.

இருந்தும் ஓயாது ஒரு சாரதிப் பயிற்சியாளராகவும், அதேவேளை கழிக்கப் பெற்ற துவிச்சக்கர வண்டிகளை வீடு தோறும் வரவழைத்து திருத்தி ஒரு சிறந்த கழிவு முகாமைத்துவத்தை சமூகத்திற்கு உணர்த்தியதோடு மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்து பயனாளிகளை மகிழ்வித்து வரும் பணத்தை பாடசாலைச் சிறார்களுக்கு கல்வி உபகரணங்களாக மாதாந்தம் விளம்பரமில்லாது வழங்குகின்ற ஓர் சிறந்த பண்பாளர் ஆவார்.

இவ்வாறு பல்வேறு வகையிலும் உதவி நிற்கும் இவரை ஒரு செயற்பாட்டு எனப் பாராட்டிக் கௌரவிப்பதை எமது நிலையம் பெருமை கொள்கின்றது.

**திரு. த. கயிலாயபிள்ளை JP**
**இறைபணிச் செம்மல்**
**தலைவர்**
**இந்து இளைஞர் மன்றம்,**
**சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம்**
**அக்கரைப்பற்று.**

## பெரும் காலப் பகுதியை சமூகப் பணிக்கு அர்ப்பணித்தவர்
## சமூகநேயன் திருவாளர். G. பாக்கியராசா JP



மட்டக்களப்பின் தென்புறத்தே அம்பாறை மாவட்டத்தில் கிழக்கே , வங்கக்கடலும், மேற்கே செழிப்பான வயல் நிலங்களும் வடக்கே அக்கரைப்பற்று நகரும், தெற்கே வளைந்தோடும் தில்லையாறும் சூழப்பட்ட கோளாவில் பெரும் பதியில் 19.10.1939ஆம் ஆண்டு ஞானமுத்து காளிமுத்து தம்பதியினருக்கு சிரேஸ்ட மகனாகப் பிறந்த பாக்கியராஜா ஐயா அவர்கள் இளமைக் காலத்திலேயே மிகவும் சுறுசுறுப்பானவராகவும், புத்திக்கூர்மையுள்ளவராகவும் காணப்பட்டார்.

அவர் தம் ஆரம்பக்கல்வியை அக்கரைப்பற்றில் RCM என அழைக்கப்படும் றோமன் கத்தோலிக்க மிசன் கலவன் பாடசாலையில் ஆரம்பித்து SSC Final வரை படித்தார். பின்பு 1957, 1958 வரையிலான காலப்பகுதிகளில் கோளாவில் பலநோக்கு கூட்டுறவு சங்க முகாமையாளராக கடமைபுரிந்த இவர் 1959 ஆம் ஆண்டு தபால் திணைக்களத்தில் இணைந்து கொண்டு தபால் உத்தியோகத்தராக 31 வருடங்கள் மிகவும் நேர்மையாகவும், கடமை உணர்வோடும் சேவையாற்றி மக்களின் நல் அபிப்பிராயத்தை பெற்ற ஒருவராக திகழ்ந்தார்.

1966 ஆம் ஆண்டு திருமணப்பந்தத்தில் இணைந்து கொண்ட ஐயா அவர்கள் அருணோதயம் என்பவரை துணைவியாக கரம்பிடித்து ஐந்து பிள்ளைச் செல்வங்களைப்பெற்று நிறைவான வாழ்க்கையை நடாத்தினார்கள். ஆரம்பகாலம் தொட்டே சமுகப்பணியில் ஆர்வம் கொண்ட ஐயா அவர்கள் கோளாவில் ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தின் தலைவராகவும், கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளராகவும், ஆலையடிவேம்பு மத்தியசபை உறுப்பினராகவும், அக்கரைப்பற்று, பனங்காடு ஆகிய வைத்தியசாலை அபிவிருத்திக்குழுக்களின் உறுப்பினராகவும் இருந்து இப் பிரதேசத்திற்கு பெரும் சேவையாற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

1948 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட கிராமோதய மண்டலய நடாத்திய பேச்சுப்போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்று அன்றைய ஜனாதிபதியாக இருந்த

மான்புமிகு R.பிரேமதாஸ அவர்களிடமிருந்து சான்றிதழும் வெசாக்சிவிலி என்னும் புத்தகமும் பெற்றுக்கொண்ட பெருமைக்குரிய வராகவும் இருக்கின்றார்.

79 அகவையை அண்மித்துக் கொண்டிருக்கும் ஐயா அவர்கள் சமுகப் பணியிலிருந்து ஒதுங்கி இருக்காமல் தற்போதும் சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், ஆலையடிவேம்பு பிரதேச கோளாவில் 01 இன் சிவில் பாதுகாப்பு ஆலோசகராகவும், இருந்து அகில இலங்கை சமாதான நீதவானாகவும் தன்னால் முடிந்த சேவையை இப் பிரதேசத்திற்கு செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டு உலக முதியோர் தினவிழா நடைபெற்றபோது ஆலையடிவேம்பு பிரதேசத்திற்கான சிறந்த மூத்த பிரஜைக்கான கோல்ட் சின்னத்தையும் சான்றிதழையும் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன் வழங்கி ஐயாவை கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இப் பிரதேச முன்னேற்றத்திற்காக சமூகப்பணி செய்து பெரும் காலப்பகுதியை கழித்த பாக்கியராஜா ஐயா அவர்களின் பணி மேலும் தொடர இறையருள் வேண்டிப் பிரார்த்தித்து ‘சமூகநேயன்’ எனக் கௌரவித்துப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. V. சுகிர்தகுமார் JP
ஊடகவியலாளர்
சமுர்த்தி உதவி முகாமையாளர்
அக்கரைப்பற்று.





**நித்தியானந்தா மரஆலை**

**ஆச்சரியந்தர வல்ல அருமையான நிழல் அமைத்த இந்து இளைஞர் மன்றத்தினர், அதன் ஸ்தாபக தலைவர் இறைபணிச் செம்மல் திரு.த.கயிலாயபிள்ளை மற்றும் நிருவாகத்தினர் பணிகளின் 25 வருட சேவையினை பாராட்டுவதில் எமது தொழிற்சாலையும் ஊழியர்களுக்கும் பெருமிதம்கொள்கின்றோம்.**

# சமூகத் திலகம் என ஜொலிக்கும் திருமதி.அமராவதி வடிவேல் அம்மா



சமூக சேவைகள் மூலம் சமூகத்தில் தடம் பதித்த சமூகசேவையாளர் வரிசையில் திருமதி.அமராவதி வடிவேல் அம்மா அவர்கள் எல்லோர் நெஞ்சங்களிலும் நீண்டு நிலைத்து நிற்பவர். சுமார் ஐம்பது ஆண்டு காலமாக சமூகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் அமராவதி அம்மையார் அவர்கள் ஓர் சமூக சேவகி ஆவார்.

செந்நெல்வயல்கள் சூழ்ந்திருக்கும் 'சிவபூமி' எனப் போற்றப்படும் பாசுபதேஸ்வர் பெருமான் அருள் செய்யும் பழம் பெரும் பதியாம் பனங்காடு கிராமத்தில் அக்கரைப்பற்று கிராமாட்சி மன்ற முன்னாள் உறுப்பினரும், சித்தர் சித்தானைக்குட்டி சுவாமிகளினதும் நெருங்கிய சீடருமான கோளாவில் குழந்தைவேல் வண்ணக்கருக்கு மகளாக 1948.08.31 இல் பிறந்தார்.

பின்தங்கிய நிலையில் இருந்த பனங்காடு கிராமம் எழுச்சி பெறவேண்டும் என்ற எண்ணம் அம்மையாரின் அடிமனதை ஆக்கிரமித்திருந்தவேளையில் பனங்காடு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அமராவதி அம்மாவை ஆரத்தழுவி அணைத்துக்கொண்டது. 1972ஆம் ஆண்டு முதல் இற்றை வரை பனங்காடு மாதுமை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவியாக இருந்து செயற்படுகிறார். இவர் ஆற்றிய பணிகள் அவ்வூர் மக்கள் நெஞ்சங்களை மகிழ்வித்த வண்ணமே உள்ளன. அல்லும் பகலும் அம்மையார் ஆற்றிய பணிகள் மூலம் பனங்காடு கிராமம் உயர்நிலை பெற்றுப்பேசப்படுகிறது. எல்லா சபைகளிலும் இவருக்கு பூமாலையும் புகழ்மாலையும் சூட்டப்பட்டு சமூகத்தில் தலைவி எனப் பெயர் பதித்தவர்.

ஆலய அறப்பணிகளிலும் தன்னை அடியாராக ஆக்கிக் கொண்ட பெருந்தகை. சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக பாசுபதேஸ்வரப் பெருமானின் ஆலய வளாகத்தை வியாழன் தோறும் சிரமதானப்பணி மூலம், குழுவினருடன் இணைந்து கூட்டிப் பெருக்கி வீதிகள் புனிதம்பெறச் செய்துகொண்டிருக்கும் ஒரு 'புனிதவதி' அம்மையார் அவர்கள்.

தானங்களில் முதன்மையானது அன்னதானம். பாசுபதேஸ்வரப் பெருமானின் ஆலய வெளிவீதியில் தன்மக்களுடன் இணைந்து சுமார் ஒரு கோடி ரூபா செலவில் அன்னதானமடம் அமைத்து அடியார்களுக்கு அன்னதானம் வாரி வழங்கிக் கொண்டிருக்கும் அமராவதி அம்மா ஒரு வள்ளல் ஆவார்.

பனங்காடு கிராமம் உயர்நிலை பெற உலக தரிசனம் (WORLD VISION) நிறுவனத்தை வரவழைத்து, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளும், கல்வியும் கிடைக்க வழிசமைத்த பெருந்தலைவி. வீடற்றோர்க்கு வீடுகள், கிணறுகள் கிடைக்க வழிகாட்டியவர். பாதைகள் என்பவற்றையும் உருவாக்க உதவியவர். கிராமிய பொருளாதாரம் சிறந்தோங்க வழிகாட்டியவர். ஏழைமாணவர்கள் உலக தரிசன உதவி மூலம் கல்விக்கான உதவிகள் பல்கலைக்கழகம் வரை கிடைக்க துணை செய்த உத்தமி.

சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம், அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றம், ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றம் போன்ற சமூக அமைப்புக்களிலும் இணைந்து 'சமூகத்திலகம்' என ஜொலிக்கும் அமராவதி வடிவேல் அம்மையாரைப் பாராட்டிக் கௌரவிப்பதில் பெருமைகொள்கின்றோம்.

திரு. வேலுப்பிள்ளை சந்திரசேகரம் JP (அகில இலங்கை)
தலைவர் - ஆலையடிவேம்பு இந்து மாமன்றம்
இயக்குனர் - சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம்
அக்கரைப்பற்று.

**இவ்வாச்சிரமத்தின் மேன்மைக்கு வித்தாகிய**
**சேவகி 'அக்கா'**
**செல்வி. முருகுப்பிள்ளை பேரின்பநாயகி**



சமைக்கவெனச் சேர்ந்தாள்
சம்பளத்தை நோக்காதாள்
கணமேனும் ஓய்வின்றி
கவனித்தாள் கண்ணெனவே

பின்தூங்கி முன்னெழுந்தாள்
அன்னையைப்போல் சலிப்பற்றாள்
கேட்கும் திறன் இருப்பதுபோல்
கேட்கும் முன்னே முன்வைப்பாள்

மேற்றனாய் காவலனாய்
மேன்மைக்கும் வித்தானாள்
தூய்மையின் சிறப்பதனை
எப்போதும் கவனித்தாள்

இழைத்திழைத்துக் கடமைசெய்தாள்
களைத்துவிட்டாள் கண்போன்றாள்
அன்னவளை அன்னத்தைச்சொரிந்தவளை
பின்னமிலாப் பெருமகளைபிரிவதுவோ!

ஓய்வுபெறும் பொன்மகளே!
இல்ல வரலாற்றில்
பிரிவிலா இடங்கொண்டாய்
வாழ்த்துகிறோம்! வாழியவே!

**இந்து இளைஞர் மன்றம்**
**அக்கரைப்பற்று**

# இல்லத்தில் இருந்து சமூகத்தில் இணைந்து மகிழ்ச்சியுடன் வாழும் இளைஞர்கள்

### பட்டப்படிப்பினை முடித்து அரச சேவை புரிபவர்கள் 2004 வரை

| பெயர் | இணை.ஆண்டு | தொழில் |
|---|---|---|
| கணபதிப்பிள்ளை கோபாலகிருஸ்ணன் | 1992 | ஆசிரியர் |
| செல்லமுத்து சுதாகரன் | 1992 | ஆசிரியர் |
| விநாயகமூர்த்தி ஜீவராசா | 1993 | ஆசிரியர் |
| செல்வராசா தவசீலன் | 1994 | சமுர்த்தி முகாமையாளர் |
| கேதாரபிள்ளை ஆனந்தராசா | 1998 | ஆசிரியர் |
| கேசுபதி விஜயரதன் | 1999 | பொறியியலாளர் |
| கேசுபதி ஜீவரதன் | 1999 | வைத்தியர் |
| தெய்வேந்திரன் ருக்மாங்கதன் | 1998 | ஆசிரியர் |
| ஈஸ்வரன் மீனவதாஸ் | 1999 | HNB காசாளர் |
| இராசதுரை சிவகுமார் | 2001 | பொறியியலாளர் |
| கணபதிபிள்ளை கேதீஸ்வரன் | 2002 | விரிவுரையாளர் |
| கனகரெத்தினம் ரஜனிகாந் | 2002 | சமுதாய சீர்திருத்தவேலைப்பரிசோதகர் |
| ஆறுமுகம் அரிகரன் | 2003 | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| அரசரெத்தினம் பிரசாத் | 2004 | பேராதனை பல்கலைக்கழகம் |

### பல்கலைக்கழகம் செல்ல தவறிய இளைஞர்களின் சமூக நிலை 2004 வரை அரசசேவையில் இருப்பவர்கள்

| பெயர் | ஆண்டு | தொழில் |
|---|---|---|
| நடராஜா பேரின்பராஜா | 1994 | பெற்றோலிய சாரதி |
| தங்கராசா பத்மபிரியன் | 1998 | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| சீனித்தம்பி கண்ணதாசன் | 2003 | சித்த வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் |
| இராசதுரை பத்மராசா | 2003 | இ.போ.ச. சாரதி |
| P.சசிகாந் | 2004 | பொலிஸ் உத்தியோகத்தர் |
| A.புருசோத்மன் | 2002 | வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் |
| S.சுதர்சன் | 2001 | FOOD CITY முகாமையாளர் |

# இல்லத்தில் இருந்து சமூகத்தில் இணைந்து மகிழ்ச்சியுடன் வாழும் இளைஞர்கள்

## ஏனைய தொழில் புரிபவர்கள்

| பெயர் | ஆண்டு | தொழில் |
|---|---|---|
| செல்வராசா அழகேந்திரன் | 1992 | பிரதான கட்டிடத் தொழிலாளி |
| ஏகாம்பரம் ரமேஸ் | 1992 | வர்த்தகர் |
| தம்பிப்பிள்ளை சுரேஸ்குமார் | 1992 | வர்த்தகர் |
| விநாகமூர்த்தி தயானந்தன் | 1992 | மலேசியா |
| தவராஜா நிரோஜன் | 1997 | சாரதி |
| செல்லமுத்து ராமச்சந்திரன் | 1997 | UK |
| ஜெயராம் குலேந்திரன் | 1992 | கட்டார் |
| சிற்றம்பலம் காந்தீபன் | 1998 | அவுஸ்ரேலியா |
| சிற்றம்பலம் ஜெயகாந்தன் | 1999 | மேற்றன் SVCDC |
| கந்தசாமி தர்சன் | 2001 | கள உத்தியோகத்தர் |
| P.கேதீஸ்வரன் | 2001 | வேல்விஷன் திட்ட உத்தியோகத்தர் |
| E.பிரணவன் | 2002 | சாரதி |
| சிற்றம்பலம் காண்டீபன் | 1999 | மருந்துக்கலவையாளர் |
| சின்னையா ஞானச்செல்வம் | 2003 | Gold Eye ஸ்ரூடியோ |
| கந்தசாமி தனுஜன் | 2003 | கள உத்தியோகத்தர் |
| S.குமணன் | 2004 | தனியார் கம்பனி |
| V.பிரசாத் | 2004 | LB Finance களஉத்தியோகத்தர் |
| தெய்வநாயகம் தேவராஜ் | 2006 | தனியார் கம்பனி |
| சுரேஸ் விதுணன் | 2004 | தனியார் கம்பனி |
| ஜெயராம் குருநாதகுமார் | 1999 | வர்த்தகர் |

பேச்சுப்போட்டியில் பரிசுபெற்றது

## ஏழைகளுக்கு இரங்கார் எவராலும் மதிக்கப்படார்

சபையின் தூண்களாய் வீற்றிருக்கும் மதிப்பு மிக்க நடுவர்களுக்கும் சபையில் அமர்ந்திருக்கும் மற்ற அனைவருக்கும் எமது அன்பின் பணிவு.........

நவீனமும் தொழிநுட்பமும் அசுரவேகத்தில் விரைந்து கொண்டு செல்லும் இக்கால கட்டத்தில் உலகம் சிந்திக்காமல் கைவிட்ட விடயங்கள் ஏராளம் தாராளம் அதில் ஒன்று தான் நான் தலைப்பாக கொண்டிருக்கும் ஏழைகளுக்கு இரங்கார் எவராலும் மதிக்கப்படார். சமூகம் வகுத்துள்ள படிநிலைகளில் இறுதிக்கட்டத்தில் உள்ளவர்கள் தான் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற வறியோர் அல்லது ஏழைகள் ஆவார். இப்பகுப்பு சமூக அந்தஸ்து, தொழில், கல்விநிலை, மற்றும் பணம் என்பவற்றை கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது.

பரந்து விரிந்துள்ள இவ்வுலகில் ஏழைகளும் பரவிக்கிடக்கின்றதை நாம் கண்கூடாகக் காணலாம். ஒரே குடும்பத்தில் ஏழை, செல்வன் என்ற பாகுபாடு ஒரே பூமியில் வாழும் எம்மிடையே எவ்வாறு ஒட்டிக் கொண்டது? என்பது மிகப் பெரிய கேள்வி தான். ஆனால்... விடையில்லாத வினா அல்ல. தனிப்பட்ட மனிதனின் சுயநலம், பேராசை, சோம்பல், குறுகிய மனப்பாங்கு போன்ற விடயங்கள் ஒன்று சேர்ந்தால் வருவது தான் இவ் வினாவுக்கான விடையாகும்.

சாதாரணசாலைகள் தொடங்கி நாம் பயணிக்கும் வாகனங்கள் கல்வி கற்கும், தொழில் புரியும் நிறுவனங்கள், ஏன் வணங்கும் வழிபாட்டுத் தலங்கள் வரையும் நாம் கண்ணால் காணும் விடயம் தான் இந்த ஏழைகள். ஏன் எத்தனை ஆயிரம் தடவைகள் எதுவித சிந்தனையும் இன்றி இவர்களைக் கடந்து போயிருப்போம். சற்றுச் சிந்தித்தோமா?

இயந்திரமயமான வாழ்வில் மனிதநேயம் மரணமடைந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டது. ஆனால் மனிதனே நீ உயிரோடு உள்ளவரை மரணித்த நேயத்தை உயிர்ப்பிக்க முடியும். நம்மிடம் உள்ளவற்றை நாம் எப்போதெல்லாம் பகிர்கின்றமோ அப்போதெல்லாம் மனிதநேயத்தை உயிர்ப்பிக்க முடியும். நம்மிடம் உள்ளவற்றை நாம் எப்போதெல்லாம் பகிர்கின்றோமோ அப்போதெல்லாம் மனிதநேயமும் இறையருளும் கைகூடும் என்பதில் துளியளவும் ஐயமில்லை.

“போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து” எனும் முதுமொழியை வாழ்வின் அருள் மொழியாய் கொண்டால் நிச்சயமாக இல்லையென்று இரக்கின்றவன் இல்லாமலே போய்விடுவான். இல்லாதவனுக்கு இரங்காமல்

விட்டோமென்றால் நிச்சயமாக வாழ்வில் நம்மீது அன்புசெய்ய யாருமின்றி தனியாகவே நிற்க வேண்டி வரும் என்பதை நாளடைவில் நினைவில் கொள்ளவேண்டி வரும்.

இதனால் தான் கடவுள்கள் தொடங்கி கவிஞர்கள் வரை பிறர் நலம் பேணுதலே நல்லறம் என வாய் மொழிந்ததோடு மட்டுமல்ல வாழ்ந்தும் காட்டியுள்ளனர். எனவே தான் பாரதி சொன்னான் “தனி ஒருவனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினை அழித்திடுவோம்” என்று அவனது கருத்து போற்றப்படத்தக்கதே. ஏனெனில் உலகமும் அதில் உள்ள வளங்களும் தனிமனிதனுக்கு உரியதன்று, மாறாக அது ஒவ்வொரு மனிதனுக்கும் உரியது. அதை ஒரு சாரார் தமதாக்க விளைந்தால் அப்பிரிவினரை அழித்து விடவேண்டும் என சிந்திக்கும் பாரதிகள் எம்மிடையேயும் தோன்றிட வேண்டும் என்பதே எமது அவா.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனையே காண்கின்றேன்! என்றார் ஏழைகளின் அரசி அன்னை தெரேசா. தன் வாழ்வில் தான்கண்ட ஒவ்வொரு ஏழையையும் புன்னகையோடு வரவேற்று அவர் தன் வாழ்வையே அவர்களுக்காக அர்ப்பணித்தார். அதனால் தான் அகிலமே அவரை ‘அன்னை’ என அன்போடு அழைக்கின்றது.

“நீங்கள் ஏழைகளுக்கு எவற்றையெல்லாம் செய்கிறீர்களோ அதை எனக்கே செய்கிறீர்கள்” எனக் கூறினார் யேசு பிரான் இவர்களையெல்லாம் உலகம் தனக்கு முடியாக சூடிக்கொண்டது என்றால் மிகையல்லயே. கவிதைகளால் ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க முயன்றவர்கள் பலநூறு உண்டு. அவர்களில் கண்ணதாசன் தொடங்கி வைரமுத்து வரை நாம் மனங்கொள்ளலாம்.

கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காகக் கொடுத்தான் ஒருத்தனுக்கா கொடுத்தான் இல்லை அவன் ஊருக்காகக் கொடுத்தான் ………” எனக் கண்ணதாசன் பாட

“பேச்சினால் செயல் வீச்சினால் மக்கள் மனங்களை உழுது ஏழையே இனி இல்லையே என்னும் சரித்திரம் எழுது” என பாடி முடித்தான் வைரமுத்து.

ஏன் உலகப் பொதுமறை என்று அழைக்கப்படும் திருக்குறள் கூட ஏழைகளுக்கு குரல் கொடுக்க மறக்கவில்லை.

அந்த வகையில்
அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப்பழி

எதுவுமே இல்லாத ஏழையரின் கொடிய பசி நோயை போக்க வேண்டும். அதுதான் பொருள் பெற்றவன் தன் பொருளைச் சேமித்து வைக்கும் இடமும் என கூறும் வள்ளுவர்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

அதாவது உள்ளத்தை பலருக்கும் பகுத்துக் கொடுத்து புகழோடு வாழவேண்டும் அப்படிப்பட்ட வாழ்வு அல்லாமல் 'உயிருக்கு ஊதியம்' என்பது வேறு யாதும் இல்லை என்கிறார்.

எனவே மேலமைந்த விடங்களை நாம் நமது கருத்தில் கொண்டு வாழத் தலைப்படும் போதுதான் உலகம் நம்மை மனிதனாகக் கொள்ளும் அன்றேல் மிருகமாய் மதிக்கப்பட்டே அழிவோம். ஓவ்வொரு மனிதனும் விழிக்க வேண்டும் என்பதே ஆன்றோர் யாவரின் கனவாகும். அக்கனவினை நனவாக்கிட விழித்திடு மனிதா! விழித்திடு !

உன் இரு கண்களின் விழிப்பிலே ஒரு நூறு ஜீவன்களின் வாழ்வும் ஒளியாகட்டும்! உன் அன்பின் வெளிச்சம் பிறருக்கு வழியாகட்டும்.

மலைபோன்று உயர்ந்த ஆன்றோர்க்கு ! பெரியோர்க்கு – என் தலை தாழ்ந்த வணக்கங்கள்.

நன்றி

செல்வி.அ.ஹீர்த்திகா
A/L
திகோ/இராமகிருஷ்ண மத்திய மகாவித்தியாலயம்.

**சிவகணேஸ் டெக்ஸ்**
**யாழ்ப்பாணம்**

ஆச்சரியந்தர வல்ல அருமையான நிழல் அமைத்த இந்து இளைஞர் மன்றத்தினர், அதன் ஸ்தாபக தலைவர் இறைபணிச் செம்மல் திரு.த.கயிலாயபிள்ளை மற்றும் நிருவாகத்தினர் பணிகளின் 25 வருட சேவையினை பாராட்டுவதில் எமது நிலையம் பெருமிதம்கொள்கின்றோம்.

## ஏழை எளியவர் மீது இரக்கப்படுபவர்களே கடவுளுக்கு பிரியமானவர்



என் தாய்க்கும் தமிழுக்கும் முதல் வணக்கம். தரணியெங்கும் புகழ் பரப்பும் இந்து மதம் பேணும் அறிவுசார் பெருந்தகைகள், நடுவர்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கங்கள்.

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதிபகவான் முதற்றே உலகு //"

என்று பொய்யாமொழிப் புலவன் புகழ்ந்துரைத்த முதற் குறளை உங்கள் முன் கூறி இந்து மதத்தின் தனித்துவத்தை எடுத்தியம்ப வந்துள்ளேன்.

இங்கு நான் எடுத்துக் கூற விரும்புவது யாதெனில் ஏழை எளியவர் மீது இரக்கப்படுபவனே கடவுளுக்குப் பிரியமானவன் என்பதாகும்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலர்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

என்ற திருமூலர் கூறியது எத்தனை அற்புதமான உண்மை என்பதை பலர் அறிவதே இல்லை.

இதை அறிந்தவர் இறைவனைத் தேடார். தமது உள்ளத்தினுள் ஊற்றெடுக்கக் கூடிய அன்பை அனைவர்க்கும் அள்ளி அள்ளிக் கொடுத்து ஆண்டவனை தமக்குள்ளே இருத்திக்கொள்வார்கள் இந்துக்கள்.

இதைத்தான் திருமூலர் நாயனார்
"உள்ளம் பெருங்கோயில் ......." தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம் என்று அழகாகாப் பாடி விளக்கியுள்ளார். அற்புதங்கள் நிறைந்த இறைசக்தி, இறை நம்பிக்கை என்பது அன்பின் ஊற்றே என்பதனை அனைவரும் அறிதல் வேண்டும்.

அனைத்து மதங்களும் எதை கூறுகிறது, வலியுறுத்துகின்றது என்று நோக்குவோமானால், நீ ஒருவர்க்கு பரிசு கொடுக்க விரும்பினால் பொன்னும் பொருளும், புகழும் அள்ளி அள்ளிக் கொடுக்க வேண்டியதில்லை. முகம் மலர்ந்து வரவேற்று நெஞ்சில் வஞ்சமில்லா இன்சொல் கூறு அதுபோதும் என்கிறது அன்புக்கும் இன்சொல்லுக்கும் பெறுமதி கிடையாது என்பதை நாம் அனைவரும் உணர்ந்தாக வேண்டும்.

ஆழ்கடல்களையும் அதிஉயர் மலைகளையும் தாங்கி காற்றில் மிதந்து கொண்டிருக்கும் இந்த உலகம் மிக அதிசயமானதொன்றல்லவா? இந்த அதிசயம் எவ்வாறு என்று வினா எழுப்புவோமானால் அது காலதேவனின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு பஞ்ச பூதங்களால் கட்டுப்பட்டு வருகிறது என்று கூறுவார்கள்.

இவை அனைத்தும் இறைவன் படைப்பு, பாதுகாப்பு என்பார்கள். இப்படைப்பும் பாதுகாப்பும் எத்தனை அற்புதமானது. ரசித்து அதில் ஒரு கணமேனும் திளைத்துப் பாருங்கள். இறைவன் என்று சொல்லப்படுகின்றவன் எத்தனை அன்பும் பரிவும் பாசமும் கருணையும் நிறைந்தவன் என்பது புரியும்.

கல்லினுள் தேரைக்கும் உணவு தந்து காப்பவன் இறைவன் என்பது எத்தனை பெரிய உண்மை. உலகில் ஒவ்வொரு விடயத்தையும் பார்த்துப் பார்த்து படைத்துப் பராமரிக்கும் இறைவன் எமக்கெல்லாம் எடுத்துக் கூறுவது ஒன்றுதான். அனைத்திலும் அன்பு செலுத்து அனைத்தையும் பாதுகாத்துக்கொள் என்பது தான் இதை மறுத்துரைக்கும் தைரியம் யாருக்கும் இல்லை என்பேன்.

இந்த இடத்தில் நான் ஒரு குறளை நினைவு படுத்த விரும்புகின்றேன்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உடையர் பிறர்க்கு

அன்பை தூரத்தே துரத்திவிட்டு அனைத்து வளங்களையும் தமதாக்கிக் கொள்பவர்கள் இன்று இவ்வுலகில் அதிகமாகக் காணப்படுவதுதான் ஏழ்மைக்குக் காரணம் என்றுரைத்தால் மிகையாகுமோ.

ஏழ்மை என்பது சோம்பலின் குழந்தை. சோம்பல் என்பது அறியாமையின் குழந்தை என்று கூறுவோமானால் அழகான இந்த உலகில் அறியாமை என்ற ஒன்று எவ்வாறு உருவாகியிருக்கும் என்று நாம் சிந்திக்க வேண்டும். அந்த அறியாமையை உடைத்தெறியும் வழிகளை ஆராய வேண்டும். இதை இன் சொல் கூறும் அன்பும் போதுமானதாகாது. அறியாமைக்கான காரணத்தை அறியும் மனிதாபிமானம் மிக்க மனித நேயமும் அறிவும் அவசியம் என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஐயோ அவன் ஏழை என்று அனுதாபப்பட்டு உண்ண உணவும் உடுக்க உடையும் உறங்க உறைவிடமும் தேவையான பணமும் பொருளும் கொடுப்பது இரக்கமல்ல! அவன் ஆயுள் முழுவதும் ஏழ்மையில் இருந்து விடுபட்டு வாழ வழிகாட்டுவதே இரக்கம் ஆகும். அத்தகைய அறிவு பூர்வமான இரக்கம் எவனிடம் இருக்கிறதோ அவனே இறைவனுக்கு பிரியமானவனாகிறான்.

யுத்தம் நடந்த இந்த பூமியில் உயிரழிவும் பொருளழிவும் ஏன் ஏற்பட்டது. எல்லோருக்கும் இருக்கவேண்டிய அன்பு தொலைந்தமையே ஆகும்.

மனித மனங்களில் பழிவாங்கும் உணர்வும், வெறுப்பும், விரக்தியும் இருந்ததே ஒழிய அன்பும், இரக்கமும் அப்பாவி ஜனங்கள் மீது பரிதாபமும் சின்னஞ் சிறு குழந்தைகள் மீது பாசமும் இருக்கவில்லை. இதனால் சந்தித்த விளைவுகள் சிறிதல்ல. அதே இடத்தில் பாதக விளைவுகளையும், நோய்த் தாக்கங்களையும் சந்தித்திருக்க வேண்டியதில்லை. ஒரு சிறு ஜீவராசி மீதும் அன்பு காட்டாது விட்டால் அது உலக மகாயுத்த அழிவை எமது கண்முன்னே நிறுத்தும் அளவிற்கு துன்பத்தை ஏற்படுத்தி விடுமல்லவா.

ஆகவே மாணவர்களும் எதிர்கால இளைய சந்ததியுமாகிய நாம் அன்பை, இரக்கத்தையும் ஏழை எழியவர் மீது பேணி வாழ்வோமாக எனக் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி

செல்வி.யோகேஸ்வரன் பிரயுக்தா
தரம் -11
திகோ/திருநாவுக்கரசு வித்தியாலயம்.


உழைப்பையும் ஆலோசனைகளையும் வழங்கி நிருவாகிகளாக இருந்து இந்நிலையத்தை உயர்த்தி இறைபதம் எய்திய அமரர்கள்



DR.M.தேவராஜன்



M.மணிவாசகம்



M.பாலசுந்தரம்



மீனாட்சி வடிவேல்



N.சற்குணநாதன்



K.சோமசுந்தரம்

ஓம் கணபதியே நம,

# நன்றிகள் பல

இவ்விழாவும் மலரும் சிறப்புற துணைபுரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றிகள்! இம்மலர் விரிவதற்கு காரணமான, இவ்வில்லத்தின் பேரன்பர்களாகத் திகழும் உணவளித்தோர், உறைவிடம் தந்தோர், உயர்வுக்கும் வாழ்விற்கும் வழி சமைத்தோர், இதயபூர்வமாக தொடர்ச்சியாக உதவி நிற்போர், அவ்வப்போது ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவி நிற்போர், உடனிருந்து பாடுபட்டோர், அனைவருக்கும் சிரந்தாழ்த்தி வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விழா மலருக்கு ஆக்கங்கள் தந்ததோடு இந்த வெள்ளி விழாவினை சிறப்பாகக் கொண்டாடிட ஆன்மீக அருளாசி தந்து அகம் நெகிழ வாழ்த்திய சுவாமிமார்கள், ஆலயங்கள், அரச, அரசசார்பற்ற அதிதிகளாக கலந்து எமது பணிக்கு முத்தான வார்த்தைகளைச் சொரிந்து மகிழ்வித்த பேராளர்களுக்கும், மலருக்காக நிதிவழங்கியோர், ஆச்சிரமத்திற்கு மைதீட்டிட உதவியோர், அன்னதானம் வழங்கிநிற்போர், கடமைகளையும், சொந்த வேலைகளையும் விட்டு பொன்னான நேரத்தையும் இவ்விழாவிற்காக செலவிட்ட சீலர்கள் அனைவருக்கும், இரு கரங் கூப்பி எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இம் மலர் சிறப்பாக மலர்வதற்கு நிதியுதவி நல்கிய செல்வச் செழிப்புமிக்க புரவலர்களுக்கும், வர்த்தகப் பெருமக்களுக்கும், ஆலயங்களுக்கும், இயக்குனர், நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும், காரியாலய உத்தியோகத்தர்களுக்கும், பரிசுக்குரிய பேச்சுக்களை தெரிவுசெய்த அறிஞர்களுக்கும், விழாவில் பங்குபற்றி தமது பேச்சாற்றலால் ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கிய கல்வி மான்களுக்கும், கலை நிகழ்வுகளிலும், பட்டிமன்றத்திலும் பங்கேற்ற அறிஞர்களுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக அன்று தொட்டு இன்றுவரை தோளோடு தோழ்நின்று ஆதரவளிக்கின்ற அன்பு நிறைந்த கண்ணியத்திற்கும் உரிய பேரன்பர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் கணனி வடிவமைப் பாளர்களுக்கும், அச்சகத்தினருக்கும், ஒலி, ஒளி தொகுப்பாளர்களுக்கும் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்பினை ஏற்பீர்கள்

நன்றிகள் பல!
வாழ்க வளமுடன்!

**உதவிச் செயலாளர்**
**திரு. க. ரஜனிகாந்**

அக்கரைப்பற்று
இந்து இளைஞர் மன்றத்தினத்தினால்
ஸ்தாபிக்கப்பட்ட

சுவாமி விபுலானந்தா சிறுவர்
அபிவிருத்தி நிலையத்தின்

# 25 ஆவது வருட வெள்ளிவிழா

# கையேடு

பணிகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

பதிவிலிருந்து
பக்கம் 9 தொடக்கம் 26 வரை